தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com



RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 87 | 4 Pages | 26.10.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 87 | 4 பக்கங்கள் | 26.10.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற**

**விளக்கம்:**
யாம் உண்மையாக கண்ட பொருள்களுள் வாய்மைவிடத் எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத்தக்கவை வேறு இல்லை.

# அகில இந்திய தொழிற்தேர்வில் முதலிடம் பிடித்த 29 மாணவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்



சென்னை, அக். 26

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டு தலின்படி, தமிழ்நாடு அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வரும் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 2877.43 கோடி ரூபாய் செலவில் டாடா டெக்னாலஜீஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்டன.

தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வுகள் நடைபெற்றது. இத்தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 26,236 அரசு தொழிற்பயிற்சி மாணவ, மாணவியரும் மற்றும் 19,097 தனியார் தொழிற்பயிற்சி மாணவ, மாணவியரும் என மொத் தம் 45,333 மாணவ மாணவியர் பங் கேற்றனர்.

இத்தேர்வில் 24,853 அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவ மாணவிய ரும், 16,738 தனியார் தொழிற்ப யிற்சி நிலைய மாணவ மாணவியரும், என மொத்தம் 41,591 மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதில், தமிழ்நாட்டில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் பயிற்சி தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே இண்டஸ்டி ரியல் ரோபாடிக்ஸ் தொழிற் பிரிவில் வேப் பலோடை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவர் என்.அந்தோணி சேசுராஜ் மற்றும் திருச்சி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவி என். மோகன பிரியா மற்றும்

மேனுபேக்சரிங் பிராசஸ் கன்ட் ரோல் அன்ட் ஆட்டோ மேஷன் தொழிற் பிரிவில் சிதம்பரம் அரசி னர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவி யு.பிரசிதா மற்றும் வேப்பலோடை அரசினர் தொழிற்ப யிற்சி நிலையத்தில் பயின்ற மாண வர் எஸ்.மணிமுருகன் ஆகியோர் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

இன்பர்மேஷன் டெக்னாலஜி தொழிற் பிரிவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்), கோயம் புத்தூரை சார்ந்த கே.இந்துஸ்ரீ அகில இந்திய அளவில் முதலிடம் பெற் றுள்ளார். மேலும் நவீன கால தொழிற்பிரிவுகள் உட்பட பல்வேறு தொழிற் பிரிவுகளிலும் தமிழ் நாட்டை சேர்ந்த 19 அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவ, மாணவிக ளும் மற்றும் 5 தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவ, மாணவிக ளும் என மொத்தம் தமிழ்நாட்டை சேர்ந்த 29 மாணவ மாணவிகள் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

பயிற்றுநர்களுக்கான பயிற்சியில் பயிற்சி பெற்ற காட்டுமன்னார் கோவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை சேர்ந்த பயிற்றுனர் வி.ஸ்வேதா, வெல்டர் தொழிற்பிரி வில் அகில இந்திய அளவில் முதலி டத்தை பெற்றுள்ளார்.

இவ்வாறு, அகில இந்திய அள வில் முதலிடம் பெற்று தமிழ்நாட் டிற்கு பெருமை சேர்த்த 29 மாணவ மாணவிகளும் மற்றும் 1 பயிற்றுந ரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலா ளர் கொ.வீரராகவ ராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் பா.விஷ்ணு சந்திரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## போருக்கு தயாராகும் ஈரான்; இஸ்ரேல் ராணுவம் தாக்கினால் தக்க பதிலடி கொடுக்க திட்டம்



டெஹ்ரான், அக். 26

இஸ்ரேல் மீது கடந்த 1ந்தேதி ஈரான் மிகப்பெரிய அளவில் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் தற்காப்புக்காக நடத்தப்பட்டதாக ஈரான் கூறியது. சுமார் 180 பாலிஸ்டிக் ஏவுகணைகள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன. இஸ்ரேலில் உள்ள ராணுவ முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் தெரிவித்தது.

இருப்பினும் இதில் பெரும்பாலான ஏவுகணைகள் இஸ்ரேலின் ஏவுகணை தடுப்பு அமைப்பின் மூலம் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் கூறியது. அதே சமயம், இந்த தாக்குதலுக்கு நிச்சயம் பதிலடி கொடுப்போம் எனவும் இஸ்ரேல் அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், போரை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு ஈரான் ராணுவத்திற்கு அந்நாட்டின் உயர் தலைவர் அயட்டோலா அலி காமேனி அறிவுறுத்தி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தினால், அந்த தாக்குதலின் தீவிரத்தை பொறுத்து அதற்கு ஏற்றவாறு பதிலடி கொடுக்க ஈரான் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதலால் ஈரானில் பெரிய அளவிலான சேதமோ, உயிரிழப்புகளோ ஏற்பட்டால், பதிலுக்கு ஈரான் ராணுவம் மிகப்பெரிய அளவில் பதில் தாக்குதல் நடத்தும் என்றும், அதே சமயம் ராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கேற்றவாறு பதிலடி கொடுப்போம் என்றும் ஈரானைச்சேர்ந்த ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## காசாவில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் 38 பேர் உயிரிழப்பு



காசா, அக். 26

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதற்கு பதிலடியாக காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் அரசு போர் தொடுத்தது. ஓராண்டை கடந்து நடந்து வரும் மோதலில் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் உயிரிழந்து உள்ளனர். மேலும் லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். ஹமாஸ் அமைப்பை முழுமையாக அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், காசாவில் உள்ள கான் யூனிஸ் பகுதியில் இஸ்ரேல் ராணுவம் இன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் 38 பேர் உயிரிழந்ததாக காசா சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. காசாவில் போர்நிறுத்தம் கொண்டு வர சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில், இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தனது தாக்குதலை தீவிரப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## 8 மாதங்களுக்கு பிறகு பூமிக்கு திரும்பிய 4 விண்வெளி வீரர்கள்



வாஷிங்டன், அக். 26

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த மேத்யூ டாமினிக், மைக்கேல் பராட் மற்றும் ஜீனெட் எப்ஸ், ரஷியாவைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் கிரெபென்கின் ஆகிய 4 விண்வெளி வீரர்களை 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பியது. இவர்கள் சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

இந்த 4 பேரும் தங்கள் ஆய்வுப் பணிகளை முடித்துவிட்டு, கடந்த 2 மாதங்களுக்கு முன்பே பூமிக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் போயிங் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், அந்த விண்கலம் விண்வெளி வீரர்கள் இன்றி கடந்த செப்டம்பர் மாதம் பூமிக்கு வந்தடைந்தது. அதனை தொடர்ந்து மில்டன் புயல் காரணமாக மீண்டும் விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் ஆகிய இரு விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்திற்கு 8 நாட்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக சென்றிருந்தனர். அவர்களும் பூமிக்கு திரும்ப முடியாமல் அங்கேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் அவர்களின் ஆய்வுப் பணி 8 நாட்களில் இருந்து 8 மாதங்களாக நீட்டிக்கப்பட்டது. மேலும் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் சமீபத்தில் 2 விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பி வைத்தது. இந்த நிலையில், மார்ச் மாதம் விண்வெளிக்கு சென்ற 4 விண்வெளி வீரர்களும் சுமார் 8 மாதங்களுக்கு பிறகு தற்போது பூமிக்கு பத்திரமாக வந்து சேர்ந்துள்ளனர். மெக்சிகோ வளைகுடாவில் புளோரிடா கடற்கரை அருகே இன்று அதிகாலை அவர்களது விண்கலம் பாராசூட் உதவியுடன் கடலில் விழுந்தது. பின்னர் விண்வெளி வீரர்கள் 4 பேரும் படகுகள் மூலம் கரைக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது சர்வதேச விண்வெளி மையத்தில் 4 அமெரிக்கர்கள் மற்றும் 3 ரஷியர்கள் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு மெகா பட்டாசுக் கடை விற்பனையினை அமைச்சர் தொடங்கி வைத்தார்

புதுக்கோட்டை, அக். 26

எம்.எம்.16, புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை யில், கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட கலெக்டர் மு.அருணா, தலைமையில் திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தார்.

பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் மொத்தம் 8 பட்டாசுக் கடைகள் திறக்கப்பட்டு, , ந்தாண்டு தீபாவளிக்கு யுலுலுயு, ளுவுயுனுயுசுனு, றுநு வுறுழு, யுஐடு ஆகிய நிறுவனங்களின் புதிய தயாரிப்பு பட்டாசு வகைகள் அனைத்தும் விற்பனை செய்யப்படவுள்ளது. புதுக் கோட்டை மாவட்டத்தில் சென்ற ஆண்டு ரூ.45 , லட்சம் பட்டாசு விற்பனை செய்யப்பட்டது.

இந்தாண்டு பட்டாசு விற்பனை , லக்கு ரூயஅ.1.25 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையில் தரமான பட்டாசுகளை வாங்கிக் கொள்ளலாம் எனவும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீவா, வட்டாட்சியர் பரணி, மஹாராஜ் பேக்கரி உரிமையாளர் சி.அருண்ராஜ் மற்றும் செந்தில், வீரமணி, ரத்தினம், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநி திகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.





மதுரை மாவட்டம் அவனியாபுரம் பகுதியில் மருது சகோதரர்கள் சிலைக்கு மதுரை மாவட்ட செயலாளர் உயர்திரு ராஜன் செல்லப்பா எம் எல் ஏ அவர்கள் மாலை அணிவித்தனர் அவர்களுடன் திரு ராஜ் சத்யன் அவர்களும் எம் எல் ஏ பெரிய புள்ளான் அவர்களும் அவனியாபுரம் பகுதியில் அமைந்திருக்கும் கழக உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்




பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட தொழில் மையம் சார்பில் தொழில் முனைவோருக்கான கடன் வசதியாக்கல் முகாம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் கல்விக்கடனுதவி வழங்கும் முகாமில் மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் புதிய தொழில் தொடங்குவதற்கான கடனுதவி ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பிரபு ஜெயக்குமார் மோசஸ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், மகளிர் திட்ட இயக்குநர் அமுதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக உலக போலியோ தினம் அனந்தபுரத்தில் அனுசரிக்கப்பட்டது. அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுகா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். போலியோ விழிப்புணர்வு பேரணியை கால்நடை மருத்துவர் பாபுராஜ் அவர்கள் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு அனந்தபுரம் தமிழரசி பாராமெடிக்கல் கல்லூரி மாணவிகள். தாளாளர் பிரதீப். ஆசிரியை அரிச்செல்வி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான மோசடி வழக்கில் மேலும் 50 பேருக்கு சம்மன்



சென்னை, அக்.26

தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, கடந்த 201115ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் போது போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த போது போக்குவரத்துக்கழகத்தில் கண்டக்டர், டிரைவர், தொழில்நுட்ப பணியாளர் வேலை வாங்கி தருவதாக கூறி பலரிடம் பணம் பெற்றுக்கொண்டு மோசடியில் ஈடுபட்டதாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் தனித்தனியாக 2 வழக்குகள் பதிவு செய்தனர்.

இதுபோன்று சி.பி.சி.ஐ.டி. போலீசார் தனியாக ஒரு வழக்குப்பதிவு செய்துள்ளனர். 3 வழக்குகளில் ஒரு வழக்கில் 14 பேரும், இன்னொரு வழக்கில் 23 பேரும், மற்றொரு வழக்கில் 2 ஆயிரத்து 202 பேர் மீதும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த 3 வழக்குகளிலும் அமைச்சர் செந்தில் பாலாஜி முதல் நபராக குற்றம்சாட்டப்பட்டுள்ளார். இந்த வழக்குகள் அனைத்தும் சென்னை கலெக்டர்அலுவலகவளாகத்தில் செயல்படும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நடந்து வருகிறது. கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, செந்தில்பாலாஜி தொடர்புடைய ஒரு வழக்கில் 2,202 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளதால் 100 பேர் வீதம் நேரில் அழைத்து குற்றப்பத்திரிக்கை நகல் வழங்கப்படும் என அறிவித்த நீதிபதி, முதல்கட்டமாக 100 பேருக்கு சம்மன் அனுப்ப உத்தரவிட்டார். அதன்படி, 100 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

இந்தநிலையில் நேற்று இந்த வழக்குகள் அனைத்தும் நீதிபதி சஞ்சய்பாபா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் ஆஜரானார். ஏற்கனவே சம்மன் அனுப்பப்பட்ட 100 பேரில் சிலர் ஆஜராகவில்லை. இதைத்தொடர்ந்து நேரில் ஆஜராகாதவர்களுக்கு மீண்டும் சம்மன் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி, இதுதவிர மேலும் 50 பேருக்கு சம்மன் அனுப்பவும் உத்தரவு பிறப்பித்தார். பின்னர், வழக்கு விசாரணையை நவம்பர் 25ந் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

# மோசமான வானிலை எதிரொலி: வானில் வட்டமடித்த இரு விமானங்கள் பத்திரமாக தரையிறக்கம்



மதுரை. அக்.26

மதுரை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இதற்கிடையே, சென்னை மற்றும் பெங்களூருவில் இருந்து 2 இண்டிகோ விமானங்கள் இன்று 9 மணியளவில் மதுரை விமான நிலையம் வந்தன. மதுரையில் கனமழை பெய்து வருவதால் 2 விமானங்களும் தரையிறங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இரு விமானங்களும் வானத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில், மோசமான வானிலை மற்றும் கனமழையால் நடுவானில் வட்டமடித்துக்கொண்டிருந்த இரு இண்டிகோ விமானங்களும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு பிறகு மதுரை விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறங்கின.

# கனமழை எதிரொலி: கன்னியாகுமரியில் பள்ளிகளுக்கு விடுமுறை

சென்னை, அக்.26

தமிழகத்தில் நாளை கன்னியாகுமரி உள்ளிட்ட 20 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையைப்பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்துக்கு இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழையை எதிர்பார்க்கலாம் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், கனமழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நாளை பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# மூத்த குடிமக்களை பாதுகாக்க கோரி வழக்கு: அரசு விளக்கம் அளிக்க ஐகோர்ட் உத்தரவு



மதுரை:, அக்.26

மதுரை புதுமாகாளிபட்டி ரோடு பகுதியைச் சேர்ந்த வக்கீல்மணிபாரதி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

தற்போது பெரும்பாலான மூத்த குடிமக்கள், பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகளால் எந்த பாதுகாப்பும் கிடைக்காமல் உள்ளனர். இதனால் தனிமையில் வசிக்கும் பல முதியவர்கள் சமூக விரோதிகளின் தொந்தரவுகளை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசு, மூத்த குமடிக்கள் மற்றும் பெற்றோர் நல விதிமுறைகளை 2009ம் ஆண்டில் ஏற்படுத்தியது.

அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மூத்த குடிமக்கள், பெற்றோர்களின்பாதுகாப்பை அந்தந்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அல்லது மாநகர போலீஸ் கமிஷனர் உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு போலீஸ் நிலைய அதிகாரியும், தனது எல்லைக்கு உள்பட்ட பகுதியில் உள்ள மூத்த குடிமக்கள் நலனை தினசரி பராமரித்து உயர் அதிகாரிக்கு அறிக்கைஅனுப்பவேண்டும். குறிப்பாக ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும். மேலும் மாதத்துக்கு ஒரு முறையாவது மூத்த குடிமக்களை போலீஸ் நிலைய அதிகாரி சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

இதற்காக அந்தந்த போலீஸ் நிலையத்துக்கு உள்பட்ட பகுதியில் குழு அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டன. ஆனால் தமிழகத்தின் எந்த மாவட்டத்திலும் இந்த விதிமுறைகள் முழுமையாக கடைபிடிக்கப்படவில்லை. இதனால் முதியவர்கள் சமூக விரோதிகளின் தொந்தரவுகளை சந்தித்து வருகின்றனர். எனவே ஐகோர்ட்டு மதுரை கிளை எல்லைக்கு உள்பட்ட மாவட்டங்களின் ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் இந்த விதிமுறைகளை கடைபிடித்து மூத்த குடிமக்களை பாதுகாக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்தவழக்குநீதிபதிகள் சுப்பிரமணியன், விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கு குறித்து தமிழக அரசின் உள்துறை செயலாளர், டி.ஜி.பி. மாவட்ட கலெக்டர்களுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவிட்டு, அடுத்தகட்ட விசாரணையை நவம்பர் மாதம் 20ந்தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

# இந்தியாஇலங்கை கூட்டுப்பணிக்குழு கூட்டத்தில் மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண திட்டம் வகுக்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, அக்.26

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

மீனவர்கள் நலனுக்கான இந்திய, இலங்கைக் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் வரும் 29ந் தேதி இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடந்து கைது செய்யப்படுவது, சிறையில் அடைக்கப்படுவது, அபராதம் விதிக்கப்படுவது உள்ளிட்ட அத்துமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதும், அதில் தமிழக அரசின் மீன்வளத்துறை அதிகாரிகள் பங்கேற்பதும் வரவேற்கத்தக்கவை.

கடைசியாக 2022ம் ஆண்டில் இந்தியாஇலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நடைபெற்றிருந்த நிலையில், இரு ஆண்டுகளுக்குப் பின் இந்தக் கூட்டம் நடைபெறுவது மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிறது.

இந்திய, இலங்கைக் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் கூடிக் கலையும் கூட்டமாக அமைந்து விடக் கூடாது. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியதாக உள்ள நிலையில், அந்த எதார்த்தத்தை உணர்ந்து கொண்டு இருதரப்பு மீனவர்களும் சிக்கலின்றி மீன் பிடிக்க என்ன வழி? என்பதை இரு நாட்டு அதிகாரிகளும் ஆராய வேண்டும்.

மீனவர் சிக்கலுக்கு ஒரே நாளில் தீர்வு காண முடியாது என்பது அனைவரும் அறிந்தது தான் என்றாலும் கூட, இந்த சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண எத்தகைய அணுகுமுறைகளை கடைபிடிப்பது,

எந்தெந்த நிலைகளில் பேச்சுகளை நடத்துவது என்பது குறித்த தெளிவானத் திட்டம் இந்தக் கூட்டத்தில் வகுக்கப்பட வேண்டும். அவ்வாறு வகுக்கப்படும் திட்டத்தை இலங்கை அரசுடன் இணைந்து செயல்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அரியலூரில் கைதான பெண் உள்பட 3 பேர் தமிழகம் முழுவதும் கைவரிசை போலீசார் விசாரணை



அரியலூர், அக். 26

அரியலூர் மாவட்டம், செந்துறையை அடுத்த இலுப்பையூர் தெற்கு தெருவை சேர்ந்தவர் கருணாமூர்த்தி (வயது 50). இவர் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை கடை நடத்தி வருகிறார்.

இந்தநிலையில், இவரை கடந்த ஆண்டு மே மாதம் மர்ம ஆசாமி ஒருவர் செல்போனில் தொடர்பு கொண்டு பேசுகையில், வேவ் எப்.எக்ஸ். என்ற இணையதளத்தில் முதலீடு செய்தால் தினமும் வருமானம் வரும் என்றும், குறுகிய காலத்தில் அதிக லாபம் பெறலாம் என்றும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் பல்வேறு இணைய எண்களில் இருந்து பேசியுள்ளனர்.

இவர்களது பேச்சை நம்பிய கருணாமூர்த்தி மர்ம ஆசாமிகள் கூறிய பல்வேறு வங்கிக்கணக்குகளில் ரூ.71 லட்சத்து 28 ஆயிரத்து 770 செலுத்தியுள்ளார். பின்னர் அவர்கள் பணத்தை மோசடி செய்ததால் மனமுடைந்த கருணாமூர்த்தி அரியலூர் மாவட்ட சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் கடந்த மே மாதம் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்தநிலையில், போலீஸ் சூப்பிரண்டு செல்வராஜ் உத்தரவின்படி, கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு (மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மற்றும் இணைய குற்றப்பிரிவு) விஜயராகவன், சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர்கவிதா, சப்இன்ஸ்பெக்டர் மணிகண்டன் ஆகியோர் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இதில், மோசடியில் ஈடுபட்டவர்கள் கோவை மாவட்டம், போத்தனூரை சேர்ந்த ரியாஸ்கான் (27), குனியமுத்தூரை சேர்ந்த ரம்யா (28), பாப்பநாயக்கன்புதூரை சேர்ந்த மகேஸ்வரி (47) என தெரியவந்தது.

இதையடுத்து 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் இவர்களிடம் இருந்து ரூ.2 லட்சத்து 23 ஆயிரம், 4 செல்போன்கள், 1 மடிக்கணினி, 2 வங்கிக்கணக்கு புத்தகம், 4 ஏ.டி.எம். கார்டுகள், 4 சிம் கார்டுகள், 2 காசோலை புத்தகம், 4 போலி முத்திரை சீல்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், இந்த மோசடியில் வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என்று அரியலூர் சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கைதான பெண் உள்பட 3 பேரும் தமிழகம் முழுவதும் நெட் ஒர்க் அமைத்து பலரிடம் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக போலீசார் சந்தேகிக்கின்றனர். அதன் அடிப்படையில் விசாரணை துரிதப்படுத்தப்பட்டு உள்ளது.

கைதானவர்களின் இணையதளத்தில் பதிவு செய்து பணத்தை இழந்தவர்கள் குறித்த விவரத்தை சேகரிக்கவும், இந்த இணையதளத்தை முடக்கவும் போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். மேலும் இணையதளம் மூலம் பணத்தை இழந்தவர்கள் சைபர் கிரைம் மற்றும் உள்ளூர்போலீசாரைதொடர்பு கொள்லலாம் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும் இந்த மோசடியில் வேறு சிலருக்கும் தொடர்பு இருப்பதாக போலீசார் சந்தேகிக்கிறார்கள். இது குறித்தும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. இது போன்று சிறிய முதலீடு மூலம் அதிக லாபம் பெறலாம் என்று கூறும் யாரையும் நம்பி பணம் அளிக்க வேண்டாம்,

இணைய மோசடிக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.

மேலும் உங்கள் வங்கி தொடர்பான தகவல்கள், ஓ.டி.பி.யை யாரிடமும் கூற வேண்டாம் என்று சைபர் கிரைம் போலீசார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# வெளிநாட்டில் இருந்து திரும்பிய 2 பயணிகளிடம் ரூ.24 லட்சம் மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்



கே.கே. நகர், அக். 26

திருச்சி சர்வதேச பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து இலங்கை, துபாய், வியட்நாம், சிங்கப்பூர், மலேசியா, கத்தார் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஐதராபாத், டெல்லி, மும்பை உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சர்வதேச நாடுகளில் இருந்து வரும் பயணிகள் சிலர் தங்கத்தை அதிகளவில் கடத்தி வருவதும், அதனை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்வதும் அடிக்கடி நடைபெறுகிறது.

இந்த நிலையில் சிங்கப்பூரில் இருந்து அதிகாலை 2.35 மணிக்கு வந்த ஏர்இந்தியா விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறையை சேர்ந்த வான் நுண்ணறிவுப்பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, ஒரு பயணி 179 கிராம் எடையுள்ள 24 காரட் தூய்மையான தங்கசங்கிலி, தங்கதுண்டு ஆகியவற்றை தனது பேன்ட் பாக்கெட்டில் கடத்தி வந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதுபோல் சிங்கப்பூரில் இருந்து வந்த விமான பயணிகளிடமும் வான் நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, ஒரு பயணி 117 கிராம் எடையுள்ள 24 காரட் தூய்மையான தங்க துண்டை கடத்தி வந்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து 2 பேரிடம் இருந்தும் மொத்தம் ரூ.23 லட்சம் மதிப்பிலான 296 கிராம் தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் 2 பயணிகளையும் கைது செய்து அவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதேபோல் மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து பேட்டிக் ஏர் விமானம் நேற்று திருச்சி விமான நிலையம் வந்தது. இந்த விமானத்தில் வந்த பயணிகளின் ஆவணங்களை குடியுரிமை பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர். இதில் மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா கீழவளவை சேர்ந்த மகேஷ் (49) என்பவர் போலி முகவரியில் பாஸ்போர்ட் பெற்று வெளிநாடு சென்று, திரும்பியது தெரியவந்தது.

இதேபோன்று திருச்சியில் இருந்து கோலாலம்பூருக்கு செல்ல இருந்த பேட்டிக் ஏர் விமானத்தில் பயணம் செய்ய இருந்த சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையை சேர்ந்த பாண்டி (46), திருச்சியில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு செல்ல இருந்த ஏர் ஏசியா விமானத்தில் பயணம் செய்ய இருந்த சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையை சேர்ந்த ஞானசேகர் (53), திருச்சியில் இருந்து தாய்லாந்துக்கு செல்ல இருந்த ஏர் ஏசியா விமானத்தில் பயணம் செய்ய இருந்த தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, உக்கடை பகுதியை சேர்ந்த பக்கிரிசாமி (52) ஆகியோரது பாஸ்போர்ட்டை சோதனை செய்ததில் போலி முகவரியில் பாஸ்போர்ட் பெற்றது தெரியவந்தது.

இதனையடுத்து அவர்களை பிடித்த அதிகாரிகள் விமானநிலைய போலீசில் ஒப்படைத்தனர். தொடர்ந்து போலீசார் அவர்களை கைது செய்தனர்.

# வழித்தடங்களை உள்ளடக்கிய மலையேற்ற திட்டம் துணை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்




சென்னை, அக். 26

துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்இன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உள்ள 40 அழகிய, மலையேற்ற வழித்தடங்களை உள்ளடக்கிய 'தமிழ்நாடு மலையேற்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

மேலும் இத்திட்டத்தின் இலச்சினையினை வெளியிட்டு, இணையவழி முன்பதிவிற்காக www.trektamilnadu.com என்றபிரத்யோக வலைதளத்தையும் தொடங்கி வைத்தார்.

இத்திட்டம் தமிழ்நாட்டின் வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகளில் நிலையான முறையில் மலையேற்றம் மேற்கொள்வதை ஒரு நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு வன அனுபவக் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்துறையின் கூட்டு முன்னெடுப்பில் உருவாக்கப்பட்டு உள்ளது.

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மலையேற்றத்திற்கான முன்பதிவு மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். 18 வயதிற்குட்பட்டவர்கள் பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்புதல் கடிதத்துடன் மலையேற்றம் மேற்கொள்ளலாம். 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (எளிதான மலையேற்ற பாதைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் துணையோடு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

# மயிலாடுதுறை ஆஸ்பத்திரியில் சீர்கேடு அ.தி.மு.க. சார்பில் இன்று ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை, அக்.26

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மயிலாடுதுறை மாவட்ட அரசு தலைமை மருத்துவ ஊழியர்கள் பணியிடம் காலியாக உள்ளதாலும்; மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாலும், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ள தி.மு.க. அரசைக் கண்டித்து வருகிற 26ந் தேதி காலை 10.30 மணியளவில், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை எதிரில், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பவுன்ராஜ், தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்த ஆர்ப்பாட்டத்தில், பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தக்கலையில் 2 கோவில்களில் உண்டியலை உடைத்த கொள்ளையன் கைது




தக்கலை, அக். 26 குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள பரைக்கோடு பகுதியில் உள்ள ஸ்ரீகண்டன் சாஸ்தா கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் பக்தர்கள் அதிக அளவு வந்து தரிசனம் செய்து செல்வார்கள். இவர்கள் காணிக்கை செலுத்துவதற்காக கோவில்களில் 4 உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. கடந்த 20ந் தேதி இரவு இதில் ஒரு உண்டியல் உடைக்கப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இதுகுறித்து கோவில் செயலாளர் அனுஸ் புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கோவிலில் உள்ள சி.சி. டி.வி. கேமரா பதிவுகளை கைப்பற்றியும் ஆய்வு செய்தனர். அதில் ஒரு நபர் கோவிலுக்குள் புகுந்தது தெரிய வந்தது. அவர் யார்? என போலீசார் தீவிர விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் தக்கலை போலீஸ் இன்ஸ்பெக்டர் கிறிஸ்டி தலைமையிலான போலீசார் பள்ளியாடி பகுதியில் நேற்று ரோந்து சென்றனர். அப்போது அங்கு நின்ற ஒருவர் போலீசாரை கண்டதும் ஓட்டம் எடுத்தார். அவரை போலீசார் மடக்கி பிடித்து விசாரணை நடத்தினர். அவர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால், தக்கலை போலீஸ் நிலையம் அழைத்து வந்தனர். அவர், கோவில் உண்டியல் கொள்ளை சம்பவத்தில் கேமராவில் சிக்கிய உருவம் போல் இருந்ததால் அது பற்றி போலீசார் விசாரித்தனர். இதில், அவன் கோவில்களில் உண்டியல்களை உடைத்து பணம் கொள்ளையடித்தவன் என தெரிய வந்தது. அதனை தொடர்ந்து போலீசார் அவனை கைது செய்தனர். விசாரணையில் அவன் பள்ளியாடியை சேர்ந்த தங்கமணி என்ற ஜேம்ஸ் என தெரியவந்தது. இதேபோல் 10 நாட்களுக்கு முன்பு கன்னிமூல கணபதி கோவிலில் நடைபெற்ற உண்டியல் கொள்ளை சம்பவத்திலும் தங்க மணி தான் ஈடுபட்டுள்ளார் என தெரியவந்தது. இந்த 2 சம்பவங்களிலும் தான் ஈடுபட்டதாக போலீசாரிடம் அவன் வாக்குமூலம் கொடுத்துள்ளான். இவன் மீது ஏற்கனவே 4 உண்டியல் திருட்டு வழக்குகள் இருப்பதும் விசாரணையில் தெரிய வந்தது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புறநோயாளிகள் பிரிவில் பணியாளர் இல்லை.. கேள்வி கேட்டவரை வசைபாடிய தூய்மைப்பணியாளர்




கடலூர், அக். 26 கடலூர் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவில் டோக்கன் கொடுக்கும் பணியாளர் நீண்ட நேரமாக பணியில் இல்லாததால் நோயாளி ஒருவர் கேள்வி எழுப்பினார். டோக்கன் கொடுப்பவர் வெளியே சென்றுள்ளதாக கூறிய தூய்மைப் பணியாளர், தொடர்ந்து அநாகரிகமாக பேசினார். கேள்வி கேட்ட நோயாளிக்கு, ஒருமையிலும் திமிராகவும் தூய்மைப் பணியாளர் பதில் அளித்தார். சிஎம் செல்லுக்கு போன் செய்து கூறுவதாக அந்த நோயாளி கூற, நீ எந்த செல்லுக்கு வேண்டுமானாலும் போன் பண்ணு... போடா... என்று கூறுகிறார். 100க்கு போன் செய்தால் போலீஸ் வரும் என்று அவர் கூற... 100 போலீஸ்... 2000 போலீஸ் பார்ப்பேன் என்று அந்த தூய்மைப்பணியாளர் கூறுகிறார். டோக்கன் வாங்குவதற்காக அங்கு நின்றிருந்த பெண் ஒருவர் ஒன்றரை மணி நேரமாக காத்திருப்பதாக கூறினார். இது தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## நாய்க்கு மயக்க மருந்து கொடுத்து கூட்டுறவு அதிகாரி வீட்டில் ரூ.20 லட்சம் நகைபணம் கொள்ளை



உடுமலை, அக். 26 திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள சேகர்புரம் ஏரிப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் தண்டபாணி (வயது 49). இவர், அங்குள்ள கூட்டுறவு சொசைட்டியில் தணிக்கையாளராக வேலை செய்து வருகிறார். சம்பவத்தன்று தண்டபாணி, உடல்நிலை பாதிப்பின் காரணமாக கோவையில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று விட்டு வீடு திரும்பினார். அப்போது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். மேலும் வீட்டிற்குள் பொருட்கள் சிதறி கிடந்தன. பீரோ லாக்கரில் இருந்த 27 பவுன் தங்க நகை, ரூ.15 ஆயிரம் ரொக்கப்பணம், வெள்ளி பொருட்கள் உள்பட மொத்தம் ரூ.20 லட்சம் மதிப்பிலான நகைபணம் உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது. உடனே இது குறித்து தண்டபாணி உடுமலை போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். வீட்டில் ஆளில்லாததை நோட்டமிட்ட மர்மநபர்கள் வீட்டின் காம்பவுண்டு சுவர் ஏறி குதித்து உள்ளே புகுந்துள்ளனர். அப்போது வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த நாய் குரைக்கவே, கொள்ளையர்கள் நாய்க்கு மயக்க மருந்து கொடுத்துள்ளனர். நாய் மயங்கியதும் வீட்டிற்குள் புகுந்து தங்கள் கைவரிசையை காட்டியுள்ளனர். கொள்ளையில் ஈடுபட்ட மர்மநபர்கள் யாரென்று விசாரணை நடத்தி போலீசார் தேடி வருகின்றனர். மேலும் அங்குள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் கொள்ளையர்களின் உருவம் பதிவாகி உள்ளதா என்றும் ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் உடுமலையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பரம்பிக்குளம் அணை நிரம்பியது தண்ணீர் திறப்பு



பொள்ளாச்சி, அக். 26 கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் மாவட்டத்தில் உள்ள குளம், குட்டைகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தில் அதிக கொள்ளளவு கொண்ட அணையாக பரம்பிக்குளம் அணை உள்ளது. இந்த அணையின் முழு கொள்ளளவான 17.82 டி.எம்.சி.யை எட்டிவிட்டால் ஒரு ஆண்டுக்கு குடிநீருக்கும், பாசனத்துக்கும் போதுமானதாக இருக்கும். இந்த பிஏபி திட்ட நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை போதிய அளவில் பெய்ததால் திட்டத்தில் உள்ள அனைத்து தொகுப்பு அணைகளும் நிரம்பின. இதையடுத்து பரம்பிக்குளம், ஆழியாறு ஆகிய அணைகளில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தென்மேற்கு பருவ மழை குறைந்த பிறகு அணைகளில் இருந்து நீர் வெளியேற்றுவது நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வால்பாறை மற்றும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் தண்ணீரின் வரத்து அதிகரித்தது. நேற்று பரம்பிக்குளம் அணை தனது முழு கொள்ளளவை எட்டி முழுவதுமாக நிரம்பியது. அணை நிரம்பியதை அடுத்து, பாதுகாப்பு கருதி, அணையில் இருந்து மதகுகள் வழியாக 2,500 கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 3,500 கனஅடி நீர் வந்து கொண்டு இருக்கிறது.

## தலைமைச் செயலகத்தில் அதிர்வு? ஓட்டம் பிடித்த ஊழியர்கள்

சென்னை, அக்.26 சென்னை தலைமைச் செயலகத்தில் திடீரென அதிர்வு உணரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அனைவரும் வெளியேறியதால் பதற்றமான சூழல் நிலவுகிறது. நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள முதல் தளத்தில் டைல்சில் விரிசல் ஏற்பட்டுள்ளது. விரிசலை பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் வெளியே ஓடி வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. வெளியே ஓடி வந்த ஊழியர்களிடம் ஒரு பிரச்சனையும் கிடையாது, அச்சம் எதுவுமின்றி உள்ளே செல்லுங்கள் என்று காவல்துறையினர் அறிவுறுத்தினர்.

## ராமதாஸ் மருத்துவமனையில் பணம் திருடிய 2 பேர் கைது



திண்டிவனம், அக். 26 விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் பகுதியில் உள்ள பா.ம.க. நிறுவனர் டாக்டர். ராமதாஸ் மருத்துவமனையில் கல்லாப்பெட்டியில் இருந்த 3500 பணத்தை காணவில்லை என்று திண்டிவனம் நகர போலீஸ் நிலையத்திற்கு புகார் வந்தது. புகாரின் அடிப்படையில் திண்டிவனம் போலீசார் சி.சி.டி.வி காட்சிகளின் அடிப்படையில் அடையாளம் கண்டனர். இதில் திருடிய நபர்கள் அதே பகுதியில் சுற்றி திரியும் திண்டிவனம் கிடங்கல்1 பகுதியைச் சேர்ந்த சின்னையன் (58) மற்றும் குமார் (45) ஆகியோர் என்பது தெரிய வந்தது. அவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். இதில் அவர்கள் திருடியதை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து இருவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர். இதில் தொடர்புடைய கீழ்சிவிரி கிராமத்தைச் சேர்ந்த விஷ்வகுமாரை (45) போலீசார் தேடி வருகின்றனர் பா.ம.க., நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மருத்துவமனையிலேயே கல்லாப்பெட்டியில் திருடிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## மதுரை ரெயில்வே கோட்டத்தை திருவனந்தபுரத்துடன் இணைப்பதை ரெயில்வே நிர்வாகம் கைவிடவேண்டும் வைகோ



சென்னை, அக்.26 ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: மதுரை ரெயில்வே கோட்டத்தை திருவனந்தபுரம் தேர்வு வாரியத்துடன் இணைப்பதன் விளைவாக தமிழர்களின் வேலைவாய்ப்பு கேரள இளைஞர்கள் வசம் செல்ல வாய்ப்புள்ளது. ரெயில்வே நிர்வாகத்தின் இச்செயல் கடும் கண்டனத்திற்கு உரியது. இது குறித்து ஏற்கனவே நான் பலமுறை ரெயில்வே அமைச்சரை நேரில் சந்தித்தும், பாராளுமன்றக் கூட்டத்திலும் வலியுறுத்தினேன். நல்ல முடிவு எடுப்பதாக அப்போது உறுதி அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட தென்னக ரெயில்வே பொது மேலாளர் உடனான கூட்டத்திலும் இது குறித்து விவாதித்தேன். அப்பொழுதும் நல்ல முடிவினை தெரிவிப்பதாக பொது மேலாளர் கூறினார். தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் வகையில் திருவனந்தபுரம் தேர்வு வாரியத்தோடு மதுரை ரெயில்வே கோட்டத்தை இணைப்பதை இந்திய ரெயில்வே நிர்வாகம் கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## திருடனுக்கு பயந்து மறைத்து வைக்கப்பட்ட ரூ.15 லட்சம் சம்பவம் பண்ணிய சொந்தக்காரர்




கடலூர், அக். 26 'கொசுவுக்கு பயந்து வீட்டை கொளுத்துதல்' பழமொழியை நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். அதுபோல திருடனுக்கு பயந்து அரிசி மூட்டைக்குள் ரூ.15 லட்சத்தை கடை உரிமையாளர் மறைத்து வைத்திருந்தார். இதனை அறியாத அவரது உறவினர் அந்த அரிசி மூட்டையை வாடிக்கையாளருக்கு விற்பனை செய்துள்ள சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடலூர் மாவட்டம் வடலூரில் உள்ள சண்முகா அரிசி மண்டி உள்ளது. இந்த கடையின் உரிமையாளர் சண்முகம். இவர் கடையில் வசூலான ரூ.15 லட்சம் பணத்தை திருட்டுக்கு பயந்து அரிசி மூட்டைக்குள் ரூ.10 லட்சத்தை ஒரு பையிலும், ரூ.5 லட்சத்தை மற்றொரு பையிலும் போட்டு மறைத்து வைத்து மற்ற அரிசி மூட்டைகளுடன் சேர்த்து வைத்துள்ளார். இதனை அடுத்து மறுநாள் காலையில் சண்முகத்தின் உறவினர் கடையில் இருந்த போது வாடிக்கையாளர் ஒருவர் வந்து அரிசி கேட்டுள்ளார். அப்போது அவர் ரூ.15 லட்சம் மறைத்து வைத்திருந்த அரிசி மூட்டையை எடுத்து விற்பனை செய்துள்ளார். சிறிது நேரத்திற்கு பிறகு கடைக்கு வந்த சண்முகம் அந்த அரிசி மூட்டை இல்லாததை கண்டு திடுக்கிட்டுள்ளார். இதுகுறித்து விசாரித்த போது தான், விபரம் தெரியவந்தது. உடனே வாடிக்கையாளரின் முகவரி தேடி சென்று விசாரித்த போது அந்த மூட்டைக்குள் ரூ.10 லட்சம் தான் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த சண்முகம் இதுகுறித்து போலீசில் புகார் அளித்தார். போலீசார் உரிய முறையில் விசாரித்து ரூ.5 லட்சத்தை மீட்டு தர வேண்டும் என்று சண்முகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கோவையில் கல்லூரி மாணவர்கள் மோதல்: 3 பேருக்கு கத்திக்குத்து

கோவை, அக்.26 தேனி மாவட்டம், பங்களா மேடு, பழைய டி.வி.எஸ். ரோடு பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார். இவரது மகன் ராகுல் (வயது 18). இவர் நவஇந்தியா பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் பி.காம். 2ம் ஆண்டு படித்து வருகிறார். இதற்காக கோவை சவுரி பாளையம் ரோட்டில் அண்ணா நகர் பகுதியில் நண்பர்களுடன் அறை எடுத்து தங்கி வருகிறார். இந்த நிலையில் ராகுலுக்கும், அதே கல்லூரியில் பி.பி.ஏ. முதலாம் ஆண்டு படிக்கும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர் ராகுல்காந்தி என்பவருக்கும் சீனியர்ஜூனியர் பிரச்சனை தொடர்பாக மோதல் இருந்து வந்தது. இந்தநிலையில் கல்லூரியில் கடந்த 19ந் தேதி தனியார் டி.வி. நிகழ்ச்சி அங்கு உள்ள ஆடிட்டோரியத்தில் நடந்தது. அப்போது மீண்டும் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. சக மாணவர்கள் அவர்களை சமாதானப்படுத்தினர். நேற்று முன்தினம் ராகுல் அங்கு உள்ள டீக்கடை அருகில் நின்ற போது மீண்டும் ராகுல்காந்தி மற்றும் அவரது நண்பர்கள் அவரிடம் தகராறு செய்தனர். அப்போது ராகுலுடன் தங்கி படிக்கும் மாணவர் கதிர் என்பவர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தார். அப்போது ராகுல் காந்தியின் நண்பர்கள் அவரது மோட்டார் சைக்கிளை பறித்துக் கொண்டு சென்றனர். அந்த மோட்டார் சைக்கிளில் ஜிபிஎஸ் கருவி வசதி இருந்ததால் அதன் மூலம் மோட்டார் சைக்கிள் ராம நாதபுரம் ஒலம்பஸ், பாரதி நகரில் இருப்பதை கண்டு பிடித்து நேற்று மாலை கதிர் மற்றும் நண்பர்கள் மீண்டும் எடுத்துக்கொண்டு திரும்பி வந்தனர். நேற்று மாலை ராகுல் காந்தி, தனது நண்பர்கள் சிலருடன் ராகுல் தங்கியிருந்த அறைக்கு சென்றனர். அங்கிருந்த ராகுல் மற்றும் கதிர் அவரது நண்பர்களை அடித்து உதைத்து கத்தியால் குத்தினர். இதில் ராகுல் மற்றும் அவரது நண்பர்கள் தினேஷ் பாண்டியன், ரோஷன் ராஜா ஆகியோருக்கு தலை, கை, மார்பு, கழுத்து பகுதிகளில் கத்திக்குத்து விழுந்தது. அதோடு நிற்காமல் ராகுல் காந்தி மற்றும் அவரது நண்பர்கள் அவர்கள் தங்கியிருந்த அறையையும் அடித்து நொறுக்கினர். அதன் பிறகு அவர்கள் வந்த மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து தப்பி சென்றனர். இதை பார்த்த மற்ற மாண வர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தனர். காயம் அடைந்த மாணவர்கள் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட மாணவர் ராகுல் ராமநாதபுரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் சம்பவம் தொடர்பாக முதலாம் ஆண்டு மாணவர் ராகுல் காந்தி, கெவின் சதீஷ் மற்றும் 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## தலைமைச்செயலக கட்டிடத்தில் விரிசல் அமைச்சர் விளக்கம்



சென்னை, அக். 26 சென்னை தலைமைச் செயலகத்தில் திடீரென அதிர்வு உணரப்பட்டதால், அங்கு பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் வெளியேறினர். இதனால் அப்பகுதி சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது. நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள முதல் தளத்தில் டைல்சில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், விரிசலை பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் வெளியே ஓடி வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ சென்னை தலைமைச்செயலக கட்டிடம் உறுதியாக உள்ளது. அச்சம் வேண்டாம்.

★ தலைமைச்செயலக கட்டிடத்தின் உறுதித்தன்மை உருக்குலையவில்லை.

★ டைல்சில் ஏற்பட்ட ஏர் கிராக்கை அலுவலக ஊழியர்கள் விரிசல் என நினைத்து பயந்துவிட்டனர்.

★ சுருங்கும் தன்மை காரணமாக டைல்சில் ஏர் கிராக் ஏற்பட்டுள்ளது.

★ தற்போது பொறியாளர்கள் பரிசோதித்ததில் எந்த பிரச்சனையும் இல்லை என தெரிய வந்துள்ளது.

★ 1974ல் கட்டப்பட்ட கட்டடத்தில் 14 வருடங்களுக்கு முன் சிறுசிறு டைல்ஸ்கள் போடப்பட்டது.

★ பூச்சு பணிகள் சரியாக செய்யப்படவில்லை என கூறுவது தவறான குற்றச்சாட்டு.

★ 1க்கு 1 என்று அளவில் போடப்பட்டுள்ள பழைய டைல்ஸ்கள் அகற்றப்பட்டு 2க்கு 2 டைல்ஸ் நாளையே போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

# போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்கிட ஒன்றிணைவோம் முதலமைச்சர் வீடியோ பதிவு



சென்னை, அக். 26

போதையின் பாதையில் செல்ல வேண்டாம் என வீடியோ வெளியிட்டு தமிழக மக்கள், இளைஞர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருக்கமாக வேண்டுகோள்விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வீடியோவில்,

★ தமிழ்நாட்டின் இளைஞர், மாணவர் சமுதாயத்திற்கு உங்கள்குடும்பத்தை சார்ந்த ஒருவனாக, உங்கள் தந்தையாக ஓர் உருக்கமான வேண்டுகோள்...

★ போதையின் பாதையில் யாரும் போகக்கூடாது என மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.

★ போதை ஒழியட்டும், பாதை ஒளிரட்டும். போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்கிட ஒன்றிணைவோம் என்று தெரிவித்துள்ளார்.

# கழிவறைக்கு செல்வதாக கூறி புதுப்பெண் காதலனுடன் ஓட்டம்

புதுச்சேரி, அக். 26

புதுச்சேரி மதகடிப்பட்டு பகுதியை சேர்ந்த 22 வயது இளம் பெண்ணுக்கும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த ஒரு வாலிபருக்கும் கடந்த வாரம் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது.

இந்த நிலையில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட வாலிபர் தனது குடும்பத்தினருடன் புதுச்சேரிக்கு வந்திருந்தார். பின்னர் தான் திருமணம் செய்யப்போகும் இளம்பெண்ணுடன் இந்திரா காந்தி சதுக்கம் அருகே உள்ள ஜவுளிக் கடைக்கு தீபாவளி பண்டிகைக்காக ஜவுளி எடுக்க வந்தார்.

இந்நிலையில் ஜவுளிக் கடையில் ஜவுளி ரகங்களை தேர்வு செய்து கொண்டிருந்த போது அந்த இளம் பெண் கழிவறைக்கு செல்வதாக கூறி விட்டு சென்றார். ஆனால் வெகு நேரம் ஆகியும் திரும்பவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் ஜவுளிக் கடை முழுவதும் தேடிப் பார்த்தனர். ஆனால் புதுப்பெண்ணை காணவில்லை. பின்னர் ஜவுளிக்கடையில் உள்ள கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தபோது புதுப்பெண் ஜவுளிக்கடையில் இருந்து மற்றொரு வாலிபருடன் சேர்ந்து வெளியே செல்வது தெரியவந்தது.

இதையடுத்து விசாரணை நடத்திய போது அந்த வாலிபர் திருமணம் நிச்சயித்த இளம்பெண்ணின் காதலன் என்பது தெரியவந்தது.

அந்த இளம் பெண் படிக்கும்போதே புதுச்சேரி சோரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வாலிபரை காதலித்து வந்துள்ளார்.

தற்போது பெற்றோர் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் செய்து விட்டதால் தந்திரமாக முன்கூட்டியே தெரிவித்து காதலனை ஜவுளிக்கடைக்கு வரவழைத்து அந்த வாலிபருடன் ஓட்டம்பிடித்தது தெரிய வந்தது. இதுகுறித்து ரெட்டியார் பாளையம் போலீசில் பெற்றோர் புகார் கொடுத்தனர். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 101 அடியாக உயர்ந்தது



சேலம், அக். 26

தமிழக, கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 101.40 அடியாக உயர்ந்து காணப்பட்டது.

அணைக்கு 29 ஆயிரத்து 307 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 7500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கனஅடியும் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் 66.66 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# 19 தொழில் முனைவோர்களுக்கு தொழிற்கடன் அனுமதி ஆணைகள் மற்றும் கல்விக் கடனுக்கான காசோலைகள்: மாவட்ட கலெக்டர் வழங்கினார்



கிருஷ்ணகிரி, அக். 26

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம், அரசுத் துறைகள், மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய தொழிற்கடன் வசதியாக்கல் மற்றும் கல்விக்கடன் முகாமில் மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு 19 தொழில் முனைவோர்களுக்கு ரூ.12 கோடியே 3 ,லட்சம் மதிப்பில் தொழிற்கடன் அனுமதி ஆணைகள் மற்றும் 20 கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ரூ.1 கோடியே 20 ,லட்சத்து 43 ஆயிரத்து 800 மதிப்பில் கல்விக் கடனுக்கான காசோலைகளை வழங்கினார்.

மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு தெரிவித்ததாவது:

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் பெற்றதாகவும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் பங்களிப்பதாகவும் உள்ளதால் தமிழ்நாடு அரசு, கிருஷ்ணகிரி மாவட்ட குறு, சிறு மற்றம் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக 2024 25 ஆம் ஆண்டில் ரூ.5496.67 கோடி மதிப்பில் கடன் வழங்கவேண்டுமென ஆண்டுக் கடன் திட்ட அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை வென்றடைய, காலாண்டுக் கொருமுறை தொழிற்கடன் வழங்கும் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென மாவட்ட தொழில் மையங்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஆண்டு கடன் திட்டத்தின் படி 01.04.2024 முதல் 30.09.2024 வரை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.3508.67 கோடி தொழில் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 01.10.2024 முதல் 22.10.2024 வரை 135 பயனாளிகளுக்கு ரூ.73.68 கோடி மதிப்பில் அனைத்து வங்கிகள் சார்பாக தொழிற்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் பொருட்டு மாவட்ட தொழில் மையம் மூலம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தில் உற்பத்தி மற்றும் சேவை பிரிவின் கீழ் தொழில் தொடங்க 25மூ மானியத்துடன் கூடிய ரூ.5 கோடி வரை தொழிற்கடன் மற்றும் 3மூ பின்முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. படித்த வேலைவாய்ப்பற்ற ,ளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் வியாபாரம் செய்ய ரூ.15 ,லட்சம் வரை தொழிற் கடன் வழங்கப்படுகிறது. பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் உற்பத்தி மற்றம் சேவை பிரிவின் கீழ் தொழில் தொடங்க நகர்புறங்களில் 25மூ மற்றும் கிராமப்புறங்களில் 35மூ மானியத்துடன் ரூ.50 லட்சம் வரை உற்பத்தி தொழிலுக்கும் ரூ.20 லட்சம் வரை சேவைசார்ந்த தொழிலுக்கும் தொழிற்கடனாக வழங்கப்படுகிறது. பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் இத்திட்டத்தில் மானியம் திட்ட மதிப்பீட்டில் 35மூ அதிகபட்சம் ரூ.10 லட்சம் வழங்கப்படும்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் இத்திட்டத்தில் மானியத் தொகை திட்ட தொகையில் 35 மானியம் அதிகபட்சம் ரூ1.5 கோடி வரை வழங்கப்படும். ,து தவிர புதிதாக தொழில் தொடங்கி நடத்தி வரும் தொழில் முனைவோர்களுக்கு ரூ.150.00 ,லட்சம் வரை முதலீட்டு மானியமும், மின் மானியமாக 3 ஆண்டுகளுக்கு 20 % மின் கட்டண மானியமும் மற்றும் பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்ட தொழில் மையம் மூலம் ஒற்றைசாளர முறையில் நிறுவனங்களுக்கு தொழில் துவங்க பல்வேறு துறைகளின் அனுமதிபெற வழிவகை செய்யப்படுகிறது என மாவட்ட கலெக்டர் கே.எம். சரயு தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவிலில் நடைபெறவுள்ள அமாவாசை திருவிழா மற்றும் திருவக்கரை சந்திர மௌலீஸ்வரர் திருக்கோவிலில் நடைபெறவுள்ள பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்த முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் பழனி தலைமையில் நடைபெற்றது.

# ஆண்ட்ரியா குரலில் 'ஜாலியோ ஜிம்கானா' படத்தின் பாடல் வெளியீடு




நடன இயக்குநராக இருந்து நடிகர், இயக்குநர் என பாலிவுட் வரை வெற்றிகரமாக வலம் வருபவர் பிரபு தேவா. தமிழில் இவர் நடிப்பில் இறுதியாக வெளியான பொய்க்கால் குதிரை, பாகீரா ஆகிய திரைப்படங்கள் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இந்நிலையில், மலையாள இயக்குநர் எஸ்.ஜே.சினு இயக்கத்தில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் திரைப்படம் 'பேட்ட ராப்'. இதனை தொடர்ந்து, நாயகனாக 'மூன் வாக்' திரைப்படத்திலும் பிரபுதேவா நடிக்கிறார். பிரபுதேவா தமிழில் அடுத்தடுத்த திரைப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். நடிகர் விஜய்யின் 'கோட்' திரைப்படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், சக்தி சிதம்பரம் இயக்கும் 'ஜாலியோ ஜிம்கானா' திரைப்படத்தில் பிரபுதேவா நடித்து வருகிறார். இதில் அவருக்கு ஜோடியாக மடோனா செபாஸ்டியன் நடிக்கிறார். மேலும் திரைப்படத்தில் யாஷிகா ஆனந்த், கிங்ஸ்லி, யோகிபாபு, அபிராமி, ஒய்.ஜி மகேந்திரன் உள்ளிட்டோரும் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு அஸ்வின் விநாயக மூர்த்தி இசையமைக்க கணேஷ் சந்திரா ஒளிப்பதிவு பணிகளை கவனித்திருக்கிறார். படத்தினை ட்ரான்ஸ் இந்தியா மீடியா & என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டிரெய்லர் வெளியாகி இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் ஆண்ட்ரியா குரலில் அஸ்வின் விநாயகமூர்த்தி இசையில் 'போலீஸ் காரனை கட்டிகிட்டா' பாடல் வெளியாகியுள்ளது. சக்தி சிதம்பரம் இயக்கத்தில் பிரபு தேவாவுக்கு இது 3ஆவது படம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராணுவ வீரர்களுக்கு சிறப்புக் காட்சியாக திரையிடப்பட்ட அமரன்




இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் நடித்துள்ள திரைப்படம் 'அமரன்'. இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்துள்ளார். சிவகார்த்திகேயன் இந்த படத்தில் 'முகுந்தன்' என்ற கதாபாத்திரத்தில் ராணுவ வீரராக நடித்துள்ளார். புவன் அரோரா, சுரேஷ் சக்கரவர்த்தி, ஸ்ரீகுமார் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

'அமரன்'திரைப்படம்வருகிற31ந்தேதிதீபாவளிபண்டிகையை முன்னிட்டு வெளியாக உள்ளது. கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. சமீபத்தில் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷின் 700வது பாடலும் இப்படத்தின் முதல் பாடலுமான 'ஹே மின்னலே' பாடல் வெளியாகி வைரலானது. இந்த நிலையில் படத்தின் புரமோசன் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அமரன் படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது. பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்கள், சாய் பல்லவியுடான காதல் காட்சிகள் என டிரெய்லர் ரசிகர்களைக் கவர்ந்து வருகிறது.இந்நிலையில்,'அமரன்'திரைப்படத்தின்சிறப்புக்காட்சிடெல்லியில்ராணுவவீரர்களுக்காகதிரையிடப்பட்டது. அவர்களிடமிருந்து மிகுந்த பாராட்டுகளைப் பெற்றதாக கூறப்படுகிறது. இந்தத் திரையிடல் நிகழ்ச்சியில் நடிகை சாய் பல்லவி, நடிகர் சிவகார்த்திகேயன் பங்கேற்றார்கள். ராணுவ வீரர்கள் 'அமரன்' படக்குழுவினரை வாழ்த்தியுள்ளனர். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# நடிகை சமந்தா குறித்து சர்ச்சை பதிவு மந்திரிக்கு தெலுங்கானா நீதிமன்றம் அதிரடி உத்தரவு

நடிகை சமந்தாநாக சைதன்யா விவாகரத்துக்கு பாரதிய ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்) கட்சியின் செயல் நிர்வாக தலைவரும், முன்னாள் முதல்மந்திரி சந்திரசேகரராவின் மகனுமான கே.டி. ராமராவ் தான் காரணம் என்றும், அவர் செய்த சில விஷயங்களால் சமந்தா மட்டுமின்றி பல நடிகைகள் பாதிக்கப்பட்டதாகவும் தெலுங்கானா மாநில காங்கிரஸ் பெண் மந்திரி கொண்டா சுரேகா தெரிவித்திருந்தார்.

சமந்தா நாகசைதன்யா விவாகரத்துக்கு அரசியல் தலையீடுகளே காரணம் என்று கூறிய மந்திரி சுரேகாவுக்கு தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர்கள் உட்பட பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த சூழலில், தான் கூறிய கருத்துகளை திரும்ப பெறுவதாக மந்திரி சுரேகா தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், "பெண்களை ஓர் அரசியல் தலைவர் எப்படி சிறுமைப்படுத்தினார் என்று தான் சொல்ல வந்தேன். சமந்தாவின் உணர்வுகளை புண்படுத்துவது என் நோக்கமல்ல. எனது கருத்தால் சமந்தாவோ, அவரது ரசிகர்களோ புண்பட்டிருந்தால் நான் சொன்னதை நிபந்தனையின்றி திரும்ப பெறுகிறேன்" என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில் தெலுங்கானா காங்கிரஸ் மந்திரி கொண்டா சுரேகா மீது நடிகர் நாகார்ஜுனா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். மந்திரி கொண்டா சுரேகா தனது குடும்ப உறுப்பினர்களின் கவுரவம் மற்றும் நற்பெயரைக் கெடுக்கும் வகையில் அவதூறான கருத்துக்களை தெரிவித்ததாக நடிகர் நாகார்ஜுனா நாம்பள்ளி நீதிமன்றத்தில் கிரிமினல் மற்றும் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், சமந்தா மற்றும் நாக சைதன்யா தொடர்பான சர்ச்சை பதிவை உடனடியாக தெலுங்கானா மந்திரி கொண்டா சுரேகா நீக்க வேண்டும் உத்தரவிட்டுள்ளது.

# 50வது நாளில் அடியெடுத்து வைத்துள்ள தி கோட் படம்



இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிகர் விஜய்யின் மிரட்டலான நடிப்பில் உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாகி வெற்றிநடை போட்டுவரும் படம் 'தி கோட்'. இப்படத்தில் விஜய்யுடன், பிரபு தேவா, பிரசாந்த், மோகன், சினேகா, மீனாட்சி சவுத்ரி, லைலா, யோகி பாபு உள்ளிட்டோர் நடித்திருக்கின்றனர். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

இப்படத்தில் விஜய், அப்பா மற்றும் மகன் என இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறார். இந்த படத்தில் டீஏஜின் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும்,திரிஷா,சிவகார்த்திகேயன்ஆகியோர்கேமியோ ரோலில் நடித்துள்ளனர். இது படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்தது. இப்படம் ரூ.400 கோடி பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான 'தி கோட்' படம் முதல் நாளில் மட்டும் உலகம் முழுவதும் ரூ.126.32 கோடியை வசூலித்து. இப்படம் தற்போது வரை ரூ.450 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் இப்படம் வெளியாகி இன்றுடன் 50வது நாளை கடந்துள்ளது. அதனை சிறப்பிக்கும் வகையில் படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

# வியன்னா ஓபன் டென்னிஸ்; அலெக்ஸ் டி மினார் காலிறுதிக்கு முன்னேற்றம்



வியன்னா ஓபன் டென்னிஸ் தொடர் ஆஸ்திரியாவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டம் ஒன்றில் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், இத்தாலியின் பிளேவியோ கோபோலி உடன் மோதினார்.

இந்த போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டி மினார் முதல் செட்டை 76 (72) என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2வது செட்டில் 31 என்ற புள்ளிக்கணக்கில் டி மினார் முன்னிலையில் இருந்தார். அப்போது பிளேவியோ கோபோலி காயம் காரணமாக போட்டியில் இருந்து வெளியேறினார்.

இதன் காரணமாக அலெக்ஸ் டி மினார் காலிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் அலெக்ஸ் டி மினார், செக் குடியரசின் ஜக்குப் மென்ஷிக் உடன் மோத உள்ளார்.

# 46க்கு ஆல் அவுட் ஆனதை விட இது மோசம் இந்திய அணியை விமர்சித்த நியூசிலாந்து முன்னாள் வீரர்



இந்தியா நியூசிலாந்து இடையிலான 2வது டெஸ்ட் போட்டி புனேயில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 259 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கான்வே 76 ரன்களும்,ரச்சின் ரவீந்திரா 65 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் சுந்தர் 7 விக்கெட்டுகளும், அஸ்வின் 3 விக்கெட்டுகளும் கைப்பற்றி அசத்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட்டை இழந்து 16 ரன் எடுத்திருந்தது.

ஜெயஸ்வால் 6 ரன்களுடனும், கில் 10 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்நிலையில், 2ம் நாள் ஆட்டம் இன்று நடைபெற்று வருகிறது.

இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த இந்தியா அணியினர், நியூசிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 156 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜடேஜா 38 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் சாண்ட்னெர் 7 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 103 ரன்கள் முன்னிலையுடன் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சில் விளையாடி வருகிறது.

முன்னதாக இப்போட்டியில் இந்தியா வெளிப்படுத்திய செயல்பாட்டை முன்னாள் நியூசிலாந்து வீரர் இயன் ஸ்மித் "இப்போட்டியில் இந்தியா வெளிப்படுத்திய பேட்டிங் செயல்பாடு 46க்கு ஆல் அவுட்டான கடந்த போட்டியை விட மோசமானது. குறிப்பாக இந்த சூழ்நிலையில் ஷாட் தேர்வு மிகவும் மோசம்" என்று நேரலையில் விமர்சித்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.